

கர்த்தருக்குள் நித்திரை அடைந்த

அமரர். சிவனேஸ்வரன் ரெபேக்காவின்

# நினைவேந்தும் நிஷாமலர்

15.12.2017

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

✝



அன்னை மடியில்
02.09.2004

ஆண்டவர் அடியில்
15.11.2017

## அமரர்
# சிவனேஸ்வரன் ரெபேக்கா

ஆண்டவரே என் மீது இரங்கியருளும்

ஏனெனில் என்றும் உள்ளது உமது பேரன்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



றெபேக்கா அப்பா அம்மாவுடன்



ரெபேக்கா அம்மம்மாவுடன்



றெபேக்கா தாத்தா அம்மம்மாவுடன்



றெபேக்கா தாத்தா அம்மம்மாவுடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ரெபேக்கா அத்தைமாருடன்




ரெபேக்கா பெரியம்மா, அக்காமாருடன்



பாசத்துக்குரிய லதா ஆசிரியையுடன்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




றெபேக்கா தங்கையுடன்




றெபேக்கா அம்மம்மாவுடன்




பரிசளிப்பு விழா




கால் கோள் விழா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கர்த்தர் வகுத்தவழியில்....

ரெபேக்கா 02.09.2004 அன்று சிவனேஸ்வரன் பாலநந்தினி தம்பதியினருக்கு மகளாகப் பிறந்தார். பிறக்கும்போதே நிறைய வருத்தங்களுடன் பிறந்த ரெபேக்கா இரண்டுதரம் பெரிய சந்திரசிகிச்சைக்குட்பட்டு இருந்தார். மூன்றாந்தரமும் சத்திரசிகிச்சை செய்வதற்கு வேண்டிய பண ஒழுங்கு எல்லாம் செய்து கொண்டு அப்பலோ மருத்துவமனையை நாங்கள் அடைந்த பொழுது இவருக்கு வைத்திய சிகிச்சை அளித்த டாக்கடர் இவருக்கு இனி வைத்தியமே செய்யமுடியாது இவரை நீங்கள் கொண்டுபோங்கோ. ஏ்று சொன்னார்.

முதலாவது சத்திரசிகிச்சை 2008 இலும் இரண்டாவது சத்திரசிகிச்சை 2010 இலும் இடம்பெற்றது. இரண்டாவது சத்திரசிகிச்சையின்போது அப்பலோ வைத்தியசாலையில் சத்திர சிகிச்சைக்கூடத்தில் பணியாற்றிய தாதியர்கள் முன்னிலையில் அரைமயக்கத்தில் இருந்த ரெபேக்கா என்னுடைய தலைப்பக்கமாக இயேசப்பா வந்து நிற்கிறார். என்று சொல்லியிருக்கிறார். அந்த தாதியர்கள் எங்கள் பக்கமாக வந்து நீங்கள் இந்துவா அல்லது கிறிஸ்தவர்களா எனக் கேட்டார்கள். நாம் அப்பொழுது இரட்சிக்கப்படவில்லை நாம் பதிலாக நாங்கள் இந்துக்கள் எனக் கூறினோம்.

இவ்வாறாக இவருக்கு வைத்தியம் செய்தடாக்டர் தென்னாசியாவிலே பெரியவைத்தியர். அந்த டாக்டர் என்னுடைய தந்தையரின் கையைப் பிடித்து அங்கிள் "எங்களுக்கு மேலே ஒரு சக்தி இருக்கு இனிமேல் நீங்கள் அதை நாடிக்கொள்ளுங்கோ என்று கூறினார்.

இதற்குப்பின்பு வைத்தியர்களால் கைவிடப்பட்டநிலையில் செய்வதறியாது நாம் திகைத்து நின்றவேளையில் எனது ஜேர்மனியில் உள்ள சகோதரிக்கு கனவிலே தோன்றி யாழ்ப்பாணத்தில் ஒரு டாக்டர் இருக்கிறார் அவரிடம் இந்தப் பிள்ளையைக் கொண்டு போங்கோ அவவுக்குச் சுகம் வரும் என்று சொல்லப்பட்டது. இதையும் கேட்டுநாங்கள் பேசாமல் இருந்தோம். ஒரு நாள் நான் என்னுடைய சின்ன மகளை பாடசாலைக்குக் கூட்டிச் சென்று விட்டபின்பு வீடுநோக்கி வந்து கொண்டிருந்தேன் அப்பொழுது என்னுடைய சிந்தனையிலே என்னுடைய பிள்ளை இவ்வளவு வேதனைப்படுகிறது. நான் இன்று தற்கொலைதான் செய்கிறது என்று எண்ணிக் கொண்டு வரும்போது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்களுடைய மகள் கட்டிலிலே இருந்தவாறு அம்மா சாவகச்சேரியிலே விடுதலைப் பெருவிழாவாம் இயேசு சுகம் கொடுக்கிறாராம். நாங்கள் போவோம் என்று விடாப்பிடியாக அடம்பிடிக்க எனது தந்தையாரும் பிள்ளையின் விருப்பம் அது நீ ஒருக்கால் கொண்டுபோ. என்ற வார்த்தைக்குரற்ப நானும் எனது மகளும், சிந்து அத்தையுமாக சாவகச்சேரிக்கு கொண்டு சென்றோம். அதற்குப் பிறகு மூன்று நாட்களும் விடுதலைப் பெருவிழாவிற்குப் கொண்டு சென்றோம். பின்பு யாழ்பாபணத்திலுள்ள சிவயோகன் பாஸ்ரருடன் தொடர்பு கொண்டு அவர் எங்களுடைய அழைப்பை ஏற்று எங்களுடைய வீட்டிற்கு வந்து ஜெபித்து நடக்கமுடியாமல் படுக்கையிலே இருந்து வந்த மகளை எழுந்து நடக்கப் பண்ணி மூன்று வேளையும் நேக பாத்திரைகளை உட்கொண்டு ஜெபத்தின் மூலம் சுகம் பெற்று திருச்சபையைநாடி சுகம் பெற்று பாடசாலை சென்று கல்வி நடவடிக்கைகளிலும் ஈடுபட்டு வந்தார். அதன்பின்பு ஒரு கிறிஸ்தவ சகோதரியின் ஆலோசனைக்கேற்ப என்னைப் பிரதிஷ்டை செய்யுங்கோ என அடம்பிடித்தார் அந்த வேளை எங்களுடைய திருச்சபையின் அருட்சகோதரியை நாடி என்னுடைய மகள் இப்படிக்கேட்கிறா, நான் என்ன செய்யலாம் என வினவியபோது அவர் சொன்னார் பிள்ளையைப் பிரதிஷ்டை செய்வதென்றால் பெற்றோர் கட்டாயம் கிறிஸ்துவுக்கள் இருக்க வேண்டும் என்று நீங்கள் ஞானஸ்தானம் எடுக்கு வேண்டும் என்றும் நீங்கள் ஞானஸ்தானம் எடுக்க வேண்டும் என்று சொன்னார். அதன்பிற்பாடு நான் என்னுடைய கணவருடன் கலந்து கதைக்கும்போது அவர் நான் எடுக்கமாட்டேன். நீர்விரும்பினால் எடும் என்று கூறினார். அப்பொழுது நான் என்ன செய்வது என்று தெரியாமல் நின்றபோது எனது தந்தையார் பிள்ளைக்காக நீதியாகம் செய். நீ ஞானஸ்தானம் எடு என்று சொன்னார் அதன்படி பிள்ளையை அவரின் விருப்பப்படி அவரைப் பிரதிஷ்டை செய்தோம்.

இவ்வாறாக நாளுக்கு நாள் ஒவ்வொரு விதமான புதுப்பலத்துடன் வளர்ந்து வந்தார். எங்களுடைய திருச்சபையின் அருட்சகோதரி மீது அளவு கடந்த அன்பும் மதிப்பும் வைத்திருந்த இவர் அவர்மாதிரியே தானும் ஒரு ஊழியக்காரியாக வரவேண்டும் என்ற வாஞ்சையையும் கொண்டிருந்தார். அதற்காக அவ ஜெபிக்கின்ற முறைப்படியே தானும் ஜெபித்து எல்லோருக்கும் ஜெபித்துக் காட்டினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடிக்கடி தானாகவே அவருடன் தொடர்பு கொண்டு தனக்குச் சிறுசிறு சுகயீனங்கள் ஏற்படும் போதும் ஜெபிப்பார். அவவினுடைய பிறந்தநாளுக்கு Sister தனக்கு உடுப்புவாங்கிக் கொடுத்ததைக்காட்டி அகமகிழ்வார். சபைகூடி வருகிறதில் சிக்கல் இருக்கு. நான் ஆண்டவர் வருகிற ஞாயிறுக்கிமை ஆராதனைக்கு வருவேன் நீங்களும் வீட்டை வாங்கோ என்று கூறினார்.

இதற்கிடையில் அவர் நித்திரையடைவதற்கு முன் ஒருநாள் இரவு 1.15 மணியளவில் தான் ஒரு கனவு கண்டதாகக் கூறினார். ஒரு தேவ தூதர்வந்து எனக்குப் பொன்னாடை போர்த்துகிறார். என்று பிறகு ஒருநாள் சொன்னா அதிகாலை 3.30 மணியளவில் ஒரு ஏஞ்சல் வந்து உனக்கு என்ன வேண்டும் என்று கேட்டதாகவும் சொன்னார்.

இதற்கிடையே இவருடைய பெரியம்மாவும் ஒரு சொப்பனம் கண்டு ரெபேக்காவின் கையிலே ஒரு தங்க மோதிரம் ஒரு ஊழியக்காரர் கொண்டுவந்து அணிவித்தார் என்று கூறினார்.

இவ்வாறாக 15.11.2017 அன்று நண்பகல் மட்டும் சாப்பிட்டு ஆரோக்கியமாக இருந்து நண்பகல் 11.30 மணியளவில் தனது தந்தையாருடனும் () உடனும் தொலைபேசியில் கதைத்துவிட்டு "ஒரு தாய் தோன்றுவதுபோல் என்நேசர் தேற்றுவார் எனப்பாடிக் கொண்டிருக்கும் போது சுனாமி எச்சரிக்கை என்பதை காதால் கேட்டு மயங்கி மெத்தையிலே சரிந்தவர் அதன் பிற்பாடு மந்திகை வைத்தியசாலைக:கு எடுத்துச் செலலப்பட்டு அங்கே கர்த்தருக்குள் நிததிரையடைந்தார்.

அதன்பிறகு பெரியம்மாவின் மகள் சௌமியாவுடன் ஆண்டவர் காட்சியளித்து அவரைத் தன்னுடைய தாயின் வயிற்றில் இருக்கும் போதே நான் பெயர்சொல்லி அழைத்து பரிசுத்தம் ண்ணி ஒரு ஊழியக்காரியாய் உருவாக்கினேன் என்று கூறினார். அவர் தன்னுடைய வேலையை முடித்துவிட்டார் உங்களுக்கென ஒரு இடத்தையும் ஆயத்தப்படுத்துகிறார் என்று கூறினார்.

ஆண்டவர் பெரியம்மாவின் மகள் பிரகவிக்கு கனவிலே தோன்றி ரெபேக்கா மிகவும் ஒளியுள்ள ஒரு இடத்தில் இருப்பதாகவும் ஆறுதல் அளித்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்னையின் ஆழ்மனத் தவிப்பு

மாலாவத்தை புலோலி வடக்கு புலோலியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திரு.திருமதி. நல்லையா சரஸ்வதி தம்பதிகளின் கனிஷ்ட புத்திரி பாலநந்தினிக்கும் தேவாவத்தை அல்வாய் கிழக்கு அல்வாயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திரு.திருமதி முருகுப்பிள்ளை பூபதி தம்பதியினரின் சிரேஷ்ட புதல்வன் சிவனேஸ்வரன் தம்பதியினருக்கும் செல்வமகளாக 02.09.2004 இல் வந்து உதித்தார். பிறக்கும்போதே நோயுடன் பிறந்த ரெபேக்காவை முதற்பிள்ளை என்று அன்போடும் மிகுந்த கரிசனத்தோடும் அம்மம்மா, தாத்தாவும் உறவுகளும் அன்புகாட்டிச் சீராட்டித் தாலாட்டி வளர்த்தனர்.

ஒரு பிள்ளை அந்தந்தவயதில் எத்தகைய செயற்பாடுகளைக் கொண்டிருக்கவேண்டுமோ அந்த செயற்பாடுகள் எல்லாம் நிறைந்தவளாக அதீதமான கதை, பேச்சுக்கள், எல்லாம் நிறைந்தவளாக இருந்த அவர் 2005.10.13 இல் அம்சனா என்ற தங்கையையும் தனக்கு உடன்பிறந்த சகோதரியாகப் பெற்றுக் கொண்டாள். இருவரையும் இரட்டைக்குழந்தைகள் என்று சொல்லுமளவிற்குப் போட்டிபோட்டு வளர்த்தனர். இருவரும் மிகுந்த பாசமும் பற்றும் உடையவர்களாக வளர்ந்து வந்தனர்.

3 வயதை இடைந்ததும் முன்பள்ளியிலே சேர்ந்து மற்றவர் களுடன் ஒப்பிடும்போது தானும் எதற்கும் சளைத்தவள் அல்ல என்பதற்கிணங்க படிப்பு, ஆட்டம், பாட்டம் விளையாட்டு எல்லாவற்றிலும் தனது திறமையினை வெளிப்படுத்தி முன்பள்ளிரீதியாக கோட்டமட்ட வலய மட்டப் போட்டிகளில் எல்லாம் பங்குபற்றி பெருமளவு பரிசில்களையெல்லாம் பெற்றுத்தானும் மகிழ்ந்து பெற்றோரையும் மகிழ்வித்தார். எந்தபொரு விடயத்தையும் ஒருதரம் சொன்னால் அதனைவிளங்கிக் கொள்ளும் நுண்ணறிவையும் பெற்றிருந்தார். ஆட்டம், பாட்டம் போன்றவற்றில் இயல்பிலே நாட்டம் கொண்ட இவர் முன்பள்ளியிலோ பாடசாலையிலோ நடைபெறும் கலைவிழாக்களில் தனது திறமையினை வெளிக்காட்டத் தவறவில்லை.

தாத்தா, அம்மம்மா, அப்பா, அம்மா, தங்கை என்போரின் பாசப்பிணைப்பில் வளர்ந்த ரெபேக்கா உறவுகளோடு அன்பாய்ப் பழகுவார். எந்த நேரத்திலும் எல்லோருடனும் கலகலப்பாகக் கதைத்து தன்கதையாலே தன் பக்கம் இழுத்துக் கொள்ளும் இவர் சிறுவயது முதல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பாவிலும் அம்மாவிலும் தாத்தாவிலும் அளவு கடந்த பாசம் கொண்டவர். அப்பாவைச் செல்லமாக "அப்பாச்சி... அப்பாச்சி..." என அழைப்பார். எந்நேரத்திலும் அப்பாவினதும் தாத்தாவினதும் அம்மம்மாவினதும் மூத்த செல்லம் என்று சொல்வதில் அவளுக்குச் சரியான சந்தோஷம். எந்தப் பொருளானாலும் அப்பாவைக் கேட்டால் உடனே வாங்கி வந்து கொடுத்துவிடுவார். அப்பாவைக் கண்டால் அளவில்லாத சந்தோஷம். எந்தநேரமும் தூக்கிக் கொண்டும் ஏற்றிக் கொண்டும் திரியவேண்டும்.

தாத்தாவினதும் அம்மாம்மாவினதும் அரவணைப்பிலும் பாசத்திலும் வளர்ந்த இவர் 3 வயதை அடைந்ததும் முன்பள்ளியிலே அம்மம்மாவினதும் அம்மாவினதும் உதவியுடன் கல்விகற்க ஆரம்பித்தார். தாத்தாவை "தாத்தீ.. தாத்தீ.."என்று செல்லமாக அழைப்பார். சிறுவயதுமுதல் தாத்தாவின் கதைகளைக் கேட்டுத் தூங்கும்வரை தாத்தாவின் தோளில் போட்டு பாட்டுப்பாடிய பின்பே தூங்கும் இயல்பு கொண்டவர். சிறுவயதில் "முத்தான மூத்தல்லவோ" "செல்லக்கிளியே மெல்லப்பேசு" போன்ற பாடல்களைப் பாடி தூங்கவைக்கும் தாத்தாவின் நினைவுகளை இப்போதும் எண்ணிப்பார்ப்பார். அந்தப் பாடல்களை இப்போதும் கேட்டாலும் கண்ணீர்வடிப்பாள். எங்காவது போனால் கேற்றுக்குக் கிட்டே வரும்போது "தாத்தீ" எனக்கூப்பிட்டுக் கொண்டே வருவாள். அவரும் "உயிரே" என்று மறுமொழி கொடுப்பார். என்ன கேட்டாலும் அதனை என்னவிலை கொடுத்து என்றாலும் வாங்கிக் கொடுப்பார். தனது ஓய்வூதியத்தின் பெரும் பகுதியை இரண்டு பேரப்பிள்ளைகளுக்கும் செலவு செய்வார். தனது கைப்படத் தானே சமைப்பார் அதனை ஊட்டியும் விடுவார்.

அதே மாதிரி அம்மம்மாவும் சிறுவயது முதல் தோளிலும் மார்பிலும் போட்டு வளர்த்தவர். தாத்தாவிற்கு பிறகு அவரின் விருப்பப்படி தன்னுடைய காலத்தை இவரிற்காகவே செலவழித்தார். தாத்தாவைப் போல என்ன கேட்டாலும் வாங்கிக் கொடுத்து மகிழ்வார் அவவிற்கு ஏற்ற பணிவிடைகள் எலலாம் செய்வார் எந்தநேரமும் அம்மம்மா எனக்கூப்பிட்டபடியே இருப்பார். தனது முதுமையிலும் கூட பேரப்பிள்ளைக்கு ஏற்ற எல்லாப் பணிவிடையும் செய்து கொண்டிருந்தார். கடைசிநேரத்திலும் கூட அம்மா அம்மம்மாவுக்கு 72 வயது அம்மம்மாவைக் கவனமாகப்பாருங்கே என்று சொன்னார். இன்று அந்த அம்மம்மா நடைபிணமாக ஆற்றுவரோ தேற்றுவரோ இல்லாமல் வாழ்கிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதுமட்டுமல்லாமல் அம்மாவும் அம்சுவும் உன்னை நினைத்து அழாத நேரமில்லை. "அணு வணுவாக சாகிறது" என்றால் என்ன வென்று அனுபவரீதியாக ஒவ்வொரு நிமிடமும் உணர்ந்து கொண்டிருக்கின்றோம். "பெற்றவயிறு பற்றி எரிகிறது" என்றால் என்னவென்று இப்போது தான் நான் உணருகின்றேன். பிறந்தநாள் தொடக்கம் இறக்கும் வரை உனக்காகத்தான் உன் அன்னை வாழ்ந்தேன். எனக்கு வேலை கிடைத்த போது கூடத் தாத்தா சொன்னார். உனக்கு வேலையும் வேண்டாம் ஒன்றும் வேண்டாம் என்னுடைய குஞ்சுவைக் கவனமாகப் பார் என்று அதற்கு ஏற்ப நானும் கடைசி மட்டும் உன்னுடனேயே இருந்தேன். முன்பள்ளியிலும் பாடசாலையிலும் தொடங்கிமுடியும்மட்டும் கூட இருப்பேன். பாடசாலையிலும் 4ம் ஆண்டுவரை கூட நின்றேன். அதற்குப்பிறகு சிந்து அத்தை படிப்பிக்க வந்தபின்பு அம்மா அத்தை என்னைக்கவனமாகப் பார்ப்பா என்று சொன்னபின்புதான் நான் வீட்டிலே நின்றேன். உன்னைவருத்தக்காரப் பிள்ளையென்று நினையாமல் உன்னையும் மற்றப்பிள்ளைகளைப் போல் உருவாக்கவேண்டும் என்றே நினைத்தேன். நீ என்ன கேட்டாலும் என்ன நிகழ்ச்சிக்கு சேர்ந்து என்ன விலை கூடிய உடுப்பு என்றாலும் நான் வாங்கித்தர மறுக்கிறது இல்லை. தங்கைச்சியும் எங்களைத் தேற்றினாலும் எமக்குத் தெரியாமல், தான் மூலைக்கு மூலை ஒளித்து நின்று அழுகிறாள் என்னோடு படிக்கிற எல்லாப்பிள்ளைகளும் தங்களுக்கு அக்கா இருக்கிறா என்று சொல்லும்போது எனக்கு இருந்த ஒரு அக்காவையும் ஆண்டவர் ஏன் பறித்தார். எனக்கு இனியார் துணை என மனம் கசிந்து அழுகிறாள்.

பெரியம்மா என்றால் பிள்ளைக்கு உயிர். அதுபோலவே பெரியப்பா வையும் அக்கா மாரையும் அளவுகடந்து நேசித்தார். அதேரபோல பெரியம்மா சந்திரா அத்தையையும் நன்றாக நேசித்தார். அவர்களிடத்தில் மிகுந்த மதிப்பும் மரியாதையும் கொண்டிருந்தார். அத்தை என்னை ஏன் குட்டி என்று சொல்லுகிறீங்கள் என்று கேட்பார். அதற்கு அத்தை நான் அன்பு காட்டுகிற விருப்பத்திற்குரிய ஆட்களைக் குட்டி குட்டி என்று அழைப்பேன் என்று கூறினார். அதுபோலவே மாமாவும் தாத்தாவின் இடத்திலிருந்து எந்த எந்த நேரத்தில் என்னவென்னதேவையோ அதைக் குறிப்பறிந்து செய்வார். அடிக்கடி ரெபேக்கா சொல்லுவா அம்மா நாங்கள் எங்களுக்கு என்னவேணும் என்று சோல்லத் தெவையில்லை மாமாவும் அத்தையும் எங்களுக்கு வேண்டியதெல்லாம் செய்கிறார்கள். தாத்தா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்தால் எப்படிச் செய்வாரோ அப்படியெல்லாம் குறிப்பறிந்து நடக்கிறார்கள் என்று அடிக்கடி செல்லி அகமகிழ்வார். அவ்வாறே சாகிஜா அக்காவும் ஆரு அண்ணாவும் அப்படியே கூடிப்பிறந்த சகோதரங்கள் போல அன்புகாட்டி நடந்தார்கள். உன்னுடைய இழப்பு அவர்களையும் நிலைகுலையச் செய்துவிட்டது. தாம் பெற்றபிள்ளைக்கு எப்படியொரு சடங்கு (பூப்புனித நீராட்டுவிழா) செய்வார்களே அவ்விதமே முழுப்பொறுப்பும் ஏற்று பிள்ளையின் ஆசையை மாமாவும் அத்தையும் செய்துமுடித்தார்கள். அதிலே எமக்கெல்லாம் நல்லதிருப்தி. அண்ணையில் அத்தை நோய்வாய்ப்பட்ட வேளையில் அடிக்கடி அம்மா ரெலிபோன் எடுங்கோ அத்தையோடு கதையுங்கோ சின்ன உடம்பாலும் சின்னக்கையாலும் தானே எங்களுக்கு இவ்வளவு உழைத்துத்தந்தவர் அத்தைகாகக ஜெபியுங்கோ அம்மா என்று கூறி தானும் ஜெபிப்பார். அவ்வாறே அத்தை சுகமும் பெற்றுவிட்டார்.

பெரியம்மாமீது அளவுகடந்த அன்பும் பாசமும் கொண்டிருந்தார். தாத்தா இறந்த பின்பு பெரியம்மாவிற்கு கனவிலேதோன்றி நான் காட்டிய அதேயன்பை என்னுடைய குஞ்சுவிற்கு நீர் காட்டவேணும் என்று கூறினார். தாத்தாவிற்குக் கொடுத்த வாக்கிற்கு ஏற்ப அந்தநாள் தொட்டு பெரியம்மா அளவிடமுடியாத பாசத்தையும் அன்பையும் காட்டி ஆற்றித் தேற்றி வந்தார். பெரியம்மாவைப் பெரியம்மா என்று சொல்வதில்லை "அம்மா" என்றே உரிமையுடன் சொல்லுவார். அவவும் குஞ்சு, செல்லம் என்று அழைத்து பேசி மகிழ்வார். ஒரு நாளைக்கு ரெலிபோன் எடுக்காமல் விட்டாலும் ஏன் பெரியம்மா எடுக்கவில்லை என்றுதானே எடுத்துக் கதைப்பார். ஏன் பெரியம்மா ஏதும் சுகமில்லையோ என்றும் சுகம் விசாரிப்பார். பெரியப்பா, அக்காமார் பிரகவி, சௌமியா ஆகியோரிலும் அளவுகடந்த மதிப்பும் பாசமும் கொண்டிருந்தார். அவர்களோடு கூடப்பிறந்த சகோதரிகள் போல மணிக்கணக்கிலே பேசி அகமகிவார்கள். பெரியம்மா ஒவ்வொரு நாளும் மதியம் 12மணிக்கு எடுத்து இவவுடன் கதைத்த பின்புதான் ரீ குடிப்பார். என்ரை குஞ்சுவின் குரலைக் கேட்டபின்பு தான் நான் என்ன வேலை யென்றாலும் செய்வது என்று கூறினார். ரெலிபோனில் மணிக்கணக்கில் ஆண்டவரைப் பற்றியே இவருடன் கதைப்பார். பெரியம்மாவின் குடும்பமும் இரட்சிக்கப்பட வேண்டும் என்று ரெபேக்கா விரும்பினார் இன்று அதேபாதையில் அவர்களும் செல்கின்றார்கள் பெரியம்மாவிற்கு ஆண்டவர் கனவிலே தோன்றினார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குஞ்சு வின் கையிலே ஒரு ஊழியக்காரர் தங்க மோதிரம் ஒன்றினைப் போடுவதாகக் காட்சிகண்டது அந்தநேரத்தில் தாத்தீயும் ஊழியக்காரருடன் இருந்ததாகவும் ரெபேக்காவும் கூறினார் அக்காமார் இரண்டு பேரும் இப்போதும் நினைத்து நினைத்து தேம்பித் தேம்பி அழுகின்றார்கள் பெரியம்மாவும் ரெபேக்காவின் இழப்பால் நிலைகுலைந்து இன்று நடைபிணமாகவாழ்கின்றார். ரெபேக்காவின் மரணத்திற்கு முன்பு ஒரு தேவதூதன் வந்து தனக்குப் பொன்னாடை போர்த்திவிடக் கனவுகண்டதாகவும் ஒரு ஏஞ்சல் வந்து "உனக்கு என்னவேணும் என்று கேட்டதாகவும் பெரியம்மாவுடன் அடிக்கடி பேசிக்கொள்வார். ரவிமாமா குடும்பத்தையும் ஆழமாக நேசித்தார். ரெபேக்கா ரவிமாமாமீதும் மதிப்பும் மரியாதையும் கொண்டிருந்தார்.

வயது முதிர்ந்தவர்களுடன் அளவளாவுகின்ற என்றால் ரெபேக்காவிற்கு அலாதிப்பிரியம் அந்தவகையில் குட்டி அம்மம்மா, சரவணமுத்துத்தாத்தா, நல்லம்மம்மா, அப்பம்மம்மா, ராஜாத்தாத்தா குடும்பம், சாந்தியம்மா, குட்டிஅன்ரா, பெரியம்மா, சுனீத்திரா அன்ரா, இவர்களிலும் அளவு கடந்த அன்பும் அளவு கடந்த பாசமும் பற்றும் கொண்டிருந்தார். ரீரீதாத்தா, லோகுதாத்தா, அவர்களையும் நேசித்தார். அத்தைமாரிலும் பாசமாக இருந்தார். சிந்து அத்தை என்றால் அவவுக்கு உயிர் போகும் இடமெல்லாம் அவளைக் கூட்டிக்கொண்டு திரிவார்.

சித்தப்பா மாரிலும் அன்பு கொண்டு நடந்தா. உடன்பிறவாச் சகோதரிகளையும் அன்புடன் நேசித்தார். இந்தவகையில் விருந்தினி, நிஷா, கிருஷி, பிரிந்தா, திருத்தணி இவர்களையும் நேசித்தாா.

மற்றது சாந்தியம்மாவுடனும் நெருங்கிப்ழகினா. பிறந்த நாள்முதல் தூக்கிவளர்த்து கடைசி நேரம் படுக்கையிலே இருந்தபோது ஏற்றபணிவிடைகள் செய்து விரும்பிய உணவுகள் செய்து கொடுத்து கடைசி மட்டும் உடனிருந்தா. அதுபோலவே தனுக்குட்டி அண்ணா, ஆதித்தன் அண்ணா, சுதாக்குட்டி அண்ணாமாரை பாசத்துடன் அழைத்து தனக்குவேண்டிய உதவிகளைச் செய்விப்பார்.

உயிர்த்தோழி கவிப்பிரியாவையும் அன்புடன் நேசித்து அடிக்கடி கூப்பிட்டுக் கதைப்பார் அயலவர்களுடன் நட்புடன் பழகி எல்லோர்மனதிலும் இடம்பிடித்தா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாத்தாவழி உறவான கதிர்காமுத்தாத்தாவுடன் நேசமாக இருந்தார். ஒவ்வொருநாளும் வீட்டிற்கு வரும் தாத்தாவை தாத்தா தாத்தா என அழைத்துக் கதைப்பார். அவரின் மகள் சாளியிலும் பாசம் வைத்து நீண்டநேரம் அவருடன் கதைத்து தனக்கு வேண்டிய உதவிகளைச் செய்விப்பார். இவ்வண்ணமாக அன்பு மழையிலும் நனைந்து எல்லோரையும் மகிழ்வித்து அன்பு மகளாக வாழ்ந்து, எல்லோரது மனங்களிலும் நீங்காமல் நிறைந்திருக்கும் எங்கள் அன்புச் செல்வம் கர்த்தருக்குள் நித்தியமாகி பரலோக இன்பம் பெற்றுவிட்டார்.

**என்றென்றும் தவிப்போடு**
**அம்மா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நிசாகரி! என் நினைவுகளில் நீங்காதவள்...

நிசாகரி என் அன்பிற்கும் விருப்பத்திற்குமுரிய மாணவி யா/அல்வாய் இந்து தமிழ் கலவன் பாடசாலையில் 2010ம் ஆண்டு நான் தரம் 1 ஆசிரியராக இருந்தபோது துடுக்குத்தனமும், கெட்டித்தனமும் உடைய மாணவியாக நிசாகரி வந்து சேர்ந்தாள். உடலளவில் இயலாமையுடைய நிசாகரியுடன் அவளது தாயாரும் வந்து நின்றார். 2010ம் ஆண்டு அதிபராக இருந்த திரு.யோகேஸ்வரன் அவர்கள் தரம் 1 வகுப்பாசிரியர் என்னை அழைத்து "ரீச்சர் உங்கடை வகுப்பில் ஒரு பிள்ளை சேர்ந்திருக்கு பிள்ளை கொஞ்சம் வருத்தக்காரப் பிள்ளை அதனாலை பிள்ளையின்ர அம்மாவும் பள்ளிக்கூடம் விடும்வரை அவவோடை நிற்பாவாம். அவ நிற்கிறதாலே உங்களுக்கு ஒரு பிரச்சனையும் இல்லையே" என்று கேடடார். "எனக்கு அதனாலை ஒரு பிரச்சனையும் இல்லை சேர்" என்று நான் எனது விருப்பத்தைக் கூறினேன். அன்று முதல் எனது வகுப்பறையில் நிசாகரியும் ஒரு மாணவி ஆனாள். அவளது குடும்பத்தாரும் என்னுடன் நெருங்கிப் பழகினர்.

இயல்பாகவே, கெட்டித்தனமும், துடுக்குத்தனமும் உடைய நிசாகரி எதனையும் அறிந்து கொள்வதில் ஆர்வம் கூடியவளாகக் காணப்பட்டாள். கல்வியில் மட்டுமன்றி இணைபாட விதான செயற்பாடுகளிலும் சளைத்தவளல்ல, விளையாட்டு, நடனம், சங்கீதம், நாடகம் என்பவற்றிலும் ஈடுபாட்டுடன் பங்குபற்றுவாள் சிலவேளைகளில் நிசாகரி என்னை கேள்விகள் கேட்டு திணறடிப்பதும் உண்டு. "ஏன் எதற்கு, எப்படி என்று பல கேள்விகளை தொடுத்தபடியே கல்வி பயின்றாள். சில வேளைகளில் உடல் இயலாமையால் நிசாகரி பாடசாலைக்கு வராவிட்டால் அன்றைய தினம் வகுப்பறையே சோகையிழந்து காணப்படும். எந்நேரமும் கலகலப்பாகக் காணப்படும் இயல்புடைய அவளது சுபாவம் பாடசாலையில் எல்லா ஆசிரியர்களையும் கவர்ந்ததுண்டு.

தரம்1 தொடக்கம் 5 வரை தனது கல்வியை யா/அல்வாய் இந்து தமிழ் கலவன் பாடசாலையில் எதுவித தடையுமின்றி கற்ற நிசாகரி தரம் 5 புலமைப்பரிசில்ப் பரீடசையில் 100 புள்ளிகளைப் பெற்று சித்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீதத்தையும் அடைந்தாள். ஐந்தாண்டுகள் எனது மாணவியாக கலவி பயின்ற நிசாகரி தரம் 6ற்கு மேல் அவளால் கல்வியைத் தொடர்வதற்கு அவளது உடல்நிலை இடம் கொடுக்கவில்லை.

காலம் செய்த கோலமோ, விதியின் விளையாட்டோ தெரியவில்லை. பதின் மூன்று ஆண்டுகள் மண்ணிலே வாழ்ந்தது போதும் மீதிக்காலத்தை விண்ணிலே கழித்து விடு என்று காலனவன் எவருக்கும் கூறாமல் அவசரமாக அழைத்துச் சென்று விட்டான்.

தமது மூத்த புதல்வியை இழந்து தவிக்கும் அவரது குடும்பத்தாருக்கு எனது ஆழ்ந்த அனுதாபங்களையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன். நிசாகரி என்றும் சிறுமியின் ஆத்மா சாந்தியடைய ஆண்டவரை பிரார்த்திக்கின்றேன்.

**திருமதி. கிருஸ்ணலதா குலசங்கர்**
உதவி அதிபர்
யா/வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## றெபேக்கா.......
## மறைந்தாலும் எம் உள்ளங்களில் வாழ்கின்றாய்

நற்செய்திக் கூட்டத்தில் உம்மைக் கண்டோம்

நற்சுகம் பெற்று நாவல்லவளானாய்

நம்மெல்லோரொடும் நன்கு பழகினாய்

நற்சிந்தனை கொண்டவளாய் நம்மை வியக்கவைத்தாய்

நாம் உம் வீடு வந்தாலும் நம் வயிறு குலுங்க சிரிக்க வைப்பாய்

நாதன் யேசுவிடம் பெற்றதரிசனங்களை

நம்பிக்கையோடு பகிர்ந்து கொள்வோம்

நம்சபையோடு உள்ள உறவு நம்மை விட்டகலாதென்றாய்

நானிலமும் போற்றும் நல்மகள் நீ

நற்சதுர சுவிசேஷ சபையின் வித்து நீ

நம்மை விட்டுப் பிரிந்து சென்றாலும்

நம் உள்ளங்களில் வாழும் அழியா சொத்து நீ

நம்பி நிற்கிறோம் நாட்களை எண்ணி நிற்கிறோம்

நாம் ஒருநாள் காண்போம் உம்மை

நல் மகிழ்வுடன் என்றும்

**நற்சதுர சுவிசேஷ சபைக் குடும்பம்**
**நல்லூர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெரியமாமாவின் இதயத்துடிப்பிலிருந்து

பிரகாஸ்பதியில் பிறந்து விளையாடிய

தாத்தாவின் பத்து விரல்களும் தலைகோத வெந்நிலையாய்

முத்தத்தின் சுவாசத்திலே வளர்ந்தவளே

தாத்தாவை முதன்மொழியாக பயின்றவளே

குறையெல்லாம் மறந்து குழந்தைவாழ்வு வாழநினைத்தவளே

அறிவின் ஆச்சரியம் அன்பின் ஆழமே

ஊன் உருக வைக்கும் மாசிலா

பாசமே நீ இழந்தது ஒன்றேதான்

அப்பா, அம்மா, அம்மம்மா, மாமா மேலான பெரியம்மா பாசம்

நோய் கொடியது விஞ்ஞான, மெஞ்ஞான தோல்வியின்

கேள்விப்பொருளே

சொல்லிவிடு உன் ஆசான் தாத்தாவிடம்

பதில் அவரிடம் மட்டுமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாசமலர்

எங்கள் சந்ததி எனும் பூந்தோட்டத்தில்
மொட்டவிழ்ந்த புதுரோஜோ மலரே! நீ
முகம் காட்டிச் சிரிக்கு முன்னே
கட்டவிழ்ந்த நிலை கண்டு
கலங்குகின்றோம் அம்மா! எம்
கைவிட்டுப் போனதேனோ?

மரணப்படுக்கையிலும் உன்
மலர் முகம் வாடவில்லையே அம்மா!
எத்தனை அழகாக...... அமைதியாக......
புன்னகையோடு.... நித்திய வீட்டில்.....
இளைப்பாறவிருக்கும் நிம்மதியோடு....
நிறைவான நித்திரையில் கிடநதாயம்மா!

தொப்புள் கொடிக்கு விடைகொடுத்து...
தொடர்ந்த வாழ்க்கைப் பயணத்திலே
எல்லோரையும் நேசித்த அதிசயப் பிறவி நீ அம்மா!
எல்லோரின் நேசிப்பதற்கு ஆளான செல்வம் நீ அம்மா!
உன் உடலின் ஒரு ஓரத்தில் தானே அம்மா ஊனம்
ஆனால் உன் உடல் முழுவதும் "அறிவுப் பிரவாகம்"
ஊற்றெடுத்து ஓடுவது ஊர் அறிந்த உண்மை அம்மா!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிரித்த பங்கயம் ஒத்த முகத்தோடு
கலகலவெனப் பேசி எல்லோரையும் வசீகரிக்கும்
வஞ்சக மற்ற மனமும் கொண்ட மழலை நீ அம்மா!
ஈரேழு ஆண்டுகள் இவ்வுலகில் வாழ்ந்தது போதுமென்று
இறைவன் தன் பாதக் கமலங்களின் கீழிருக்க உன்னை
விரும்பி அழைத்தானோ அம்மா!

நிஜங்களைக் களவாடி இறைவன்
நிழல் அம்புகளை எம் இதயங்களில் தைக்க விட்டானே
நிழல் அம்புகள் நினைவுக்குறிப்புகளாய் – எம்
இதயங்களைத் துளையிடும் போது உண்டாகும்
ரண வேதனையில்
தினமும் விழிநீருர் சொரிகின்றோம் அம்மா!
பாச மலரே!
இறைவனின் நித்திய வீட்டில் இளைப்பாறி
பரலோக இராச்சியத்தில் பேரின்பநிலை எய்திநிற்கும்
உன்பதமலர் பணிகின்றோம் அம்மா!

**குடும்பத்தினர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொன்மகளே போனதெங்கே?

தாத்தீ..... தாத்தீ..... என்று
செல்லமாய்..... நீ அழைக்கும் என் தந்தை
இறைவனடி சேர்ந்த பின்பு....
தாத்தாவின் பாசம் பரிவு
அனைத்தையும் என்னிடம்
நீ எதிர்பார்த்தாய்
பாசத்தை வழங்குவதற்கு
தடையேது? மகளே
தொலை பேசியில் தொடர்ந்தது
நமது அன்புப் பரிமாற்றம்
எனது அழைப்புக்காய்
தொலைபேசி அருகே காத்திருப்பாய்
நானும் உனக்காய் காத்திருப்போன்
அழைப்புக் கிடைத்ததும்....
மணிக்கணக்காய் பேசுவாய்
ஊர்ப்புதினங்கள் முதல் உலக
விடயங்கள் வரை அலசுவாய்
இடையிடையே அம்மா.... அம்மா....
என்று ஆசையோடு அழைப்பாய்
பெரியம்மா என்று ஒரு போதும் அழைத்ததில்லையே!
நானும் பெறாமகள் என்று நினைத்ததிலலையே!
பெற்றெடுத்த பிள்ளையாய் நேசித்தேன்!
மணிக்கணக்காய் பேசும் உரையாடலில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எத்தனை சுவாரஸ்யம்?
எத்தனை ஏக்கங்கள்
எத்தனை எதிர்பார்ப்புக்கள்?
அத்தனையும் தவிடுபொடியாய்
ஆகியதோ ஒரு நாளில்.....
இன்று எங்கள் வீட்டுத் தொலைபேசி
ஊமையாய்க் கிடக்கிறது
உரையாட நீ இல்லையே! நீ
போனதெங்கே பொன் மகளே

பரலோக இராச்சியத்தை நீ
விரைவினிலே அடைவாய் என்று
இறைவனின் தரிசனம்
எனக்குக் கிடைத்தது ஆனால்....
இத்தனை விரைவில்
இடம்பெறும் என்று எண்ணவில்லையே
ஆண்டவன் சித்தத்தின் படியே
அனைத்தும் ஆகியது என்று
என்மனதைத் தேற்றுகின்றேன்

**திருமதி. குலேந்திரன்**
**ஜேர்மனி**

**அழியாத நினைவுகளோடு**
**உன் பெரியம்மா கௌரி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேவதையே! சென்றதெங்கே?

அம்மா! ரெபேக்கா என்று
ஆசையோடு நாம் அழைக்க
எங்கள் பாசமகள் – இன்று
எம் மத்தியில் இல்லை ஆனாலும்
பிறேமா அன்ரா.... பிறேமா அன்ரா.... என்று
பாசத்தோடு நீ அழைப்பது
என் காதுகளில் எந்நேரமும்
ஒலித்துக் கொண்டேயிருக்கிறது
எமது உறவுகள் மத்தியில் என்னை
"அன்ரா" என்று உரிமையோடு அழைக்கும்
ஒரே ஒரு ஜீவன் நீதான் அம்மா!
இனிமேல் அந்த அன்பான அழைப்பு?
விடையே இல்லை அம்மா! எம்
தேவதையே எங்கு சென்றாய்
எங்கள் வீட்டுக்கு உன் பெரியம்மாவோடு வந்தாய்
வாஞ்சையுடன் பழகினாய்
எங்கள் மனங்களை வென்றாய் – நெஞ்சைவிட்டு
நீங்காத நினைவுகளால் வாடுகின்றோம்

புன்னகை பூத்த முகம்
கனிவான பார்வை
கலகலவென்ற பேச்சு
வார்த்தைகளால் எவரையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டிப்போடும் சுட்டித்தனம்
உலக அறிவால் எல்லோரையும்
வியக்க வைக்கும் கெட்டிக்காரத்தனம்
இவை, உனது நிரந்தரமான அடையாளங்கள்
எமது நெஞ்சை விட்டு அழியாத கோலங்கள்
என்றென்றும் தேவதையாய்......
இறைவனுடன் வீற்றிருக்க வேண்டுகின்றேன்.

**அழியாத நினைவுகளுடன்**
**உன் பிறேமா அன்ரா**

**திருமதி.பி.மதுரநாயம்**
**உதவிக் கல்விப்பணிப்பாளர்**
**வலயக்கல்வி அலுவலகம்**
**கிளிநொச்சி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கவிதை

மொட்டிலிருந்து மலரும் பூக்கள் போல்
என் வாழ்வில் மலர்ந்த பூ தான்
இயேசு
இரவில் தோன்றும் நிலாப் போல்
என் வாழ்க்கையில் தோன்றினார் கர்த்தர்
ஜீவ ஒளியால் வந்து எம் மனக்
கதவைத் திறந்தார் நேசர்
வாழ்வில் தோன்றும் நட்சத்திரமாய்
வந்தவர் பரிசுத்தர்

## பாட்டு

கண்கள் தேடுதே கண்கள் தேடுதே என் அப்பாவை
அது வேறையாரும் இல்லை என் இயேசு அப்பாவை
என்னை தாயின் கருவில் தெரிந்து கொண்ட
இயேசு அப்பாவை கண் மூடாமல்
இவ்வுலகை காக்கிறார் பாவ வழியில்
செல்லும் மனிதர்களுக்கா தூக்கி எடுக்க வந்தீரே
எங்கள் பாவம் போக்கி சிலுவையில் தொங்கினீரே
எங்களுக்காய் மீண்டும் உயிரோடு எழுந்தீரே
அமக்கு உம்மை அறிய ஞானம் தந்தீரே
உந்தன் வார்த்தைக்கு கீழ்ப்படிய உதவினீரே
கவலைகள் கண்ணீரில் வாழ்ந்து வருவோரை
அப்பா நீர் கண்டு கொண்டீரே
வாழ்க்கை வெறுத்து நின்ற மனிதர்களை
வாழ்க்கை என்றால என்னவென்று புரிய வைத்தீரே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அப்பாவின் உள்ளத்திலிருந்து

மகளே இன்று நான் இந்த
பூமியின் அந்தத்தில் - நீயின்றி
நீ பிடித்து நடந்த என்
சுண்டுவிரலை என்
கைகளே இழந்துவிட்டது

மகளே நீயென் ஆசான்
மகளே நீயென் தாய்
மகளே நீயென் வாசகி
மகளே நீயென் சிநேகிதி
மகளே நீயென் கர்த்தாவின்
வேதம்

மகளே நீயும் நானும் வேறு
என்றாகி விட்டதில்லை
என் ஊனுருகி உயிர்
உருக்கி உன்னை எனக்கு
இறைவன் தந்தான்

இன்று ஊனை மட்டுமே
உருக்கி விட்டு அவனே
அழைத்துச் சென்றான்
உயிராக மீண்டும் நீ
எனக்குள் - ஆனால்
பிறக்காதே மீண்டும்
மாமிசகூட்டுக்குள்
உன் நித்திய பரலோகத்தில்
நிலைத்திரு

நான் இழந்தவை கணக்கில்
இல்லை என்னையே
இழக்கவைத்து
இந்த பிரிவு

பார்க்கும் இடத்தில் எல்லாம்
நீக்கமற நிறைந்து விட்டாள்
என் தாயுமானவள்
மகள்களை பிரிந்து
அப்பாளுக்குத்தான்
தெரிகின்றது தானும்
அவளுக்கு ஒரு குழந்தை
என்று

என்றும் உனக்காக
உன் ஸபரிஸத்தோடு
செபித்திருப்பேன்
ஆமென்.

**கடவுள் கொடுத்த வரம்**
**கிடைக்கவில்லை எனக்கு.....**
**கடவுளே கிடைத்தார் வரமாக**

**அப்பா.....**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## றெபேக்காவின் இருதயத்திலிருந்து......

கர்த்தர் என்னோடு பேசிய வசனங்கள்
எரேமியா தீர்க்கதரிசியின் புஸ்தகம்
1 அதிகாரம் 5ம் வசனம்
நான் உன்னைத் தாயின் வயிற்றில்
உருவாக்கு முன்னே உன்னை அறிந்தேன்.
நீ கர்ப்பத்திலிருந்து வெளிப்படு முன்னே
நான் உன்னைப் பரிசுத்தம் பண்ணி
உன்னை ஜாதிகளுக்குத் தீர்க்கதரிசியாகக்
கட்டளையிட்டேன் என்று சொன்னார்.

சங்கீதம் 45ம் அதிகாரம் 10ம் வசனம்
குமாரத்தியே கேள். நீ உன் செவியைச்
சாய்த்துச் சிந்தித்துக்கொள். உன்
ஜனத்தையும் உன் தகப்பன் வீட்டையும்
மறந்துவிடு.

145ம் சங்கீதம் தாவீது பாடின ஸ்தோத்திர
சங்கீதம்.
145 அதிகாரம் 14ம் வசனம்
கர்த்தர் விழுகிற யாவரையும் தாங்கி
மடங்கடிக்கப்பட்ட யாவரையும் தூக்கிவிடுகிறார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உபாகமம் 32ம் அதிகாரம் 6, 7ம் வசனம்

6ம் வசன் விவேகமில்லாத மதிகெட்ட ஜனங்களே
இப்படியோ கர்த்தருக்குப் பதிலளிக்கிறீர்கள்
உன்னை ஆட்கொண்ட பிதா அவரல்லவா!
உன்னை உண்டாக்கி உன்னை
நிலைப்படுத்தினவர் அவரல்லவா!

7ம் வசனம்

பூர்வநாட்களை நினைத்து முறை
தலைமுறையாய்ச் சென்ற வருஷங்களை
கவனித்துப்பார். உன் தகப்பனைக் கேள்
அவன் உனக்கு அறிவிப்பான் உன்
மூப்பர்களைக் கேள் அவர்கள் உனக்கு
சொல்லுவார்கள்.

எரேமியா 13ம் அதிகாரம் 25ம் வசனம்
நீ என்னை மறந்து பொய்யை
நம்பினபடியினாலே இது உன்னுடைய
வீதமும் என்னால் உனக்கு அளக்கப்படும்
உன்னுடைய பங்குமாயிருக்கும்
என்று கர்த்தர் சொல்லுகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திகதி 12/8/2017
உண்மையாளின் ஜீவன்        கர்த்தர் நல்லவர்

பாடல்

* நான் ஒரு மந்தை ஐயா நீர் என்னுடைய
* மேய்ப்பரையா!
* என்னை உம் பாதையில் நடத்தினீர் ஐயா!
* என்னை உமது பிள்ளையாய் உருவாக்கினீர்
* ஒருவரும் இல்லை என்று கலங்கிய போது நீர்
* என்னைத் தேற்றினீரே!
* என்னை அணைத்து உம் தோளில் சாய வைத்தீர்
* உம் தன் கரம் தந்து என்னை தூக்கினீர்.
* எந்த துக்கம் என்னை சேராமல் என்னை
* நீர் மகிழ வைத்தீரே!
* என்னை ஒரு ஊழியக்காரியாய்
* தெரிந்தெடுத்தீர்
* உம் வசனம் தியானித்து உணர வைத்தீர்
* என்னைப் பெயர் சொல்லி அழைத்தீரே!
* என்னை ஒரு சாட்சி உள்ள மகளாய்
* நிறுத்தினீரே!
* என் வாழ்வில் கோணலானவைகளை
* செவ்வையாக்கினீர்
* குழந்தைப்போல் என்னைக் காத்தீரே
* நான் உம்மை நேசிக்கிறேன் என்று
* காட்டினீரே!
* உண்மை சொல்ல வேண்டும் என்று கற்பித்தீரே

கர்த்தர் நல்லவர்        உண்மையா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ.'00' JESUS 2017

கீர்த்தி 29/9/2017

## பாடல்

எங்கேயோ இருந்த என்னை கண்ட
தெய்வமே!
உம்மையே நான் நம்பி இருப்பேனே!
என் கண்ணீரின் வேளையில்
என்னோடிருந்தீரே எப்படி நான் உம்மை
மறப்பேனோ!
மரணப்படுக்கையில் இருந்தஎன்னை
தூக்கிஎடுத்தீரே உமக்கு நான் என்ன
செய்வேனோ!
விடிவெள்ளியாய் என் வாழ்வில்
தோன்றினீரே உம்மை நான்
மகிமைப்படுத்துவேனே!
நீர் என் வாழ்வில் செய்த அற்புதங்கள்
ஏராளம் எப்படி நான் சொல்வேனோ!
பாவ வழியில் சென்ற என்னை ஜீவ
வழியில் நடத்தினீரே உமக்காய்
நான் ஊழியம் செய்வேனே;
என்னை கண்மணி போல் காத்து
வருகிறீரே உம்பாதம் பணிவேனே
என்னை இரட்சித்தீரே உமக்காய்
வாழ்ந்திடுவேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

JESUS

பாடல்

என்னைத்தேடி வந்தீரே !
என்பாவங்கள் சுமந்தீரே !
எல்லோராலும் ஒதுக்கப்பட்டிருந்த வேளையில்
உம் கரம் தந்து என்னை தூக்கினீர்
ஒரு தாய் தன் பிள்ளையை காப்பது
போல் என்னை காத்து வந்தீரே !
இருதயம் நொறுங்கி நின்ற பொழுது
என் இருதயத்தில் வந்தீரே !
எல்லோரும் கைவிட்ட வேளையில்
நான் உனக்கு இருக்கிறேன் என்று சொன்னீர்
பாவ வழியில் சென்றோரை புது வழி
காட்டி மனம் திரும்ப செய்தீர்
ஒவ்வொரு நாள் பொழுதிலும்
என்னோடிருந்து என்னை நடத்தி
வந்தீர்
தீமை செய்தோரை மன்னித்து உம்
பிள்ளைகளாய் ஏற்றுக்கொண்டீர்
வியாதியில் இருந்தோரை சுகமாக்கினீர்
பெரியவர்களாக எழும்பச் செய்தீர்
நல்ல ஞானத்தை தந்து
அறிவாளியாக மாற்றி வந்தீர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எந்தன் உயிரே நீர் என்றும் நல்லவர்
எந்தன் மூச்சே நீர் என்றும் உயர்ந்தவர்
என்னை கண்மணி போல் காத்துவந்தீரே
என்னை உம் பிள்ளையாய் தெரிந்துகொண்டீரே
என்னை பெயர் சொல்லி அழைத்தீரே
என்னை உம் பாதையில் நடத்திவந்தீர்
சிறகு உடைந்த பறவையாய் நானும்
நின்ற வேளையில் தேவா [redacted] சிறகு
தந்து பறக்க வைத்தீரே!
பாவ வழியில் சென்ற வேளையில்
அப்பா நீர் கைதந்து தூக்கி எடுத்தீரே!
என் வாழ்வில் அற்புதங்கள் செய்து என் வாழ்வை
வெளிச்சம் ஆக்கினீர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1/7/2017 சக்தி

கவிதை

கடிகாரம் மாறுவது போல்
மனிதர்கள் நிமிடம் நிமிடம்
மாறுவார்கள் கடவுளோ என்றும்
மாறாதவர் உண்மையுள்ளவராயிருக்கிறார்

இரவில் தோன்றி மறையும்
நிலாவைப்போல் சில மனிதர்களின்
வாழ்வில் இன்பம் தோன்றி
மறைந்து விடும்.

காலநிலைகளில் மழை வெயில்
மாறி மாறி வருவது போல் சில
மனிதர்களில் வாழ்வில் இன்பம்
துன்பம் மாறி மாறி வரும்

ஒவ்வொரு மனிதர்கள் வாழ்விலும்
வரும் சிந்தனைகளில் நல்லது எது
கெட்டது எது என்று
புரிந்து சிந்திப்பவர்களே
மனிதர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3/7/2017

நட்புக்கவிதை

மழைவந்தவுடன் வரும்
வானவில்லைப்போல துன்பம்
வந்தவுடன் கரம்கொடுப்பவர்களே
நண்பர்கள்

ஒவ்வொருவருடைய இன்பம் துன்பத்திலும் பங்கேற்று வருபவர்களே
நண்பர்கள் அந்த நட்பு என்றும்
மறையாதது.

இவ்வுலகில் என்னதோன்றினாலும்
மறையாதது நட்பு.

எல்லோரின் வாழ்வையும்
நாமாகத்தேடும் அன்பே நட்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாட்டு

கவிதை

சூரியனைப்போல் எம் வாழ்வில் புதிய
விடியலை தந்து

நறுமணம் பொங்கிடும் மலர்களாய்
எமது வாழ்வை புதியது புதியதாக பூக்க
வைத்தீர்

வாழ்க்கையென்றால் என்ன அர்த்தம்
என்று ஒவ்வொரு தருணத்தில் காண்பித்தீர்

அழிந்து மக்களுக்கு ஆக இவ்வுலக்கு
வந்து சிறுமையை அகற்றீர் எமக்காக
அடிகள் பட்டு உதிரம் சிந்தினீர்
இவ்வுலகில் மனிதர்கள் நிம்மதிக்கு
நிம்மதி மறுவார்க்கு ராஜா நீர்
ஒருவரை அன்பும் இரக்கம் நிறைவுடன்
நீதியும் சகலஞானமும் உள்ள
தேவனாய் என்றென்றும் இருக்கின்றீர்
இவ்வுலகை இரட்சிக்கும் பரம தேவா
ராஜா உமக்கு நன்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கவிதை

குழந்தைகளைப் போல எம்மைப் பாதுகாத்து
உம் செம்மையாக காத்து வருகிறீர்.

உம் பிள்ளை என்ற ஸ்தானத்தை
எமக்கு தந்தீர் ஐயா

உம் ஞானம் அறிவு, அன்பு
ஐஸ்வரியம் நீதி தர்மம் என்ற
இவைகளை எமக்குத் தந்து
புதிய பாதத் திறவுகோலை வழங்கினீர்

ஒவ்வொருவரின் விருப்பு வெறுப்புகளை
அறிந்து நிறைவேற்றுபவர் நீரே!
தேவா!

இவ்வுலகில் எவ்வளவு பெரிய
வைத்தியர்கள் இருந்தாலும் எம்முடைய
பரம வைத்தியர் நீரே! ராஜா
அந்த வைத்தியர்களுக்கும் திறமை
கொடுத்து உருவாக்கியது நீர்தான் ஐயா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி



தோற்றம்
**02.09.2004**

மறைவு
**15.11.2017**

இ.போ.ச (வ), பிராந்திய காரியாலயத்தில் உள்ளக கணக்காய்வு உத்தியோகத்தராக கடமையாற்றும்
திரு.மு.சிவனேஸ்வரன் அவர்களின் பாசமிகு மகள்

## அமரர் சிவனேஸ்வரன் நிஷாகரி

சின்னஞ்சிறு சிட்டுக்குருவியாய் சிறகடித்து திரிந்த எம் சித்திரமே!
சிதையாத துன்பங்களை எங்கள் இதயங்களில் தூவி
வெகு விரைவில் விண்ணோடு சங்கமம் கொண்டது ஏனம்மா?
பல காலம் வாழ்ந்து பாரினை வென்றிட எதிர்பார்த்த வேளை
பரிதாபமாய் எமனின் கைகளில் பறிகொடுத்து நிற்கின்றோமே
காற்றோடு பறந்து வரும் இளந்தென்றல் ஆற்றாது எங்கள் துயரை!
நீங்காத பாசங்களும் நேசங்களும் சேர்ந்திருந்த வேளை
தெரிந்திருக்கவில்லை பிரிவின் கொடுமையை
நீங்காத வலிச் சுமையை சுமக்கச் செய்த நீ
வாழ்நாள் முழுவதும் கண்ணீர்ச் சுமைகளுடன் நாங்கள்
மண்ணை விட்டு விண்ணைத் தொட்டு விட்டாலும் என்றென்றும்
எமது கண்ணீரும்துன்பமும் துயரமும் முற்றுப்பெறாது
ஆழ்ந்த துயரில் ஆத்மா சாந்திபெற வேண்டி பிரார்த்திப்போமாக.

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த
அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரது ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**பிராந்திய உள்ளக கணக்காய்வாளர்,
கணக்காய்வு உத்தியோகத்தர்கள், ஊழியர்கள்
இ.போ.ச. (வ), கோண்டாவில்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விழிநீர் அஞ்சலி

அன்னை மடியில்
02 - 09 - 2004

ஆண்டவன் அடியில்
15 - 11 - 2017

எமது பாடசாலையின் பழைய மாணவியும் முன்னாள் அபிவிருத்திச் சங்க உறுப்பினர்
திருமதி.பாலநந்தினி சிவனேஸ்வரன் அவர்களின் சிரேஷ்ட புத்திரியுமான

அமரர்

**செல்வி.சிவனேஸ்வரன் நிஷாகரி**



எம் வாசலில் பூத்த மலர்
வாடியதோ இன்று?
உன் கள்ளமில்லா சிரிப்பின் ஒலி
கனவாகிப் போனதேனோ?
உன் புத்தகச் சுமை தாங்கிய நெஞ்சங்கள்
நொருங்கித் தவித்திருக்க
காலன் அவன் ஓர் நொடியில் கவர்ந்துவிட்டான்
கலங்குகின்றோம் நாங்களிங்கே

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்பதோடு அன்னாரின் பிரிவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தவர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்கின்றோம்.

பிரிவால் துயருறும்
அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்
யா/அல்வாய் இந்து தமிழ் கலவன் பாடசாலை.
அல்வாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் கண்ணீர்த்துளிகள்....

## அமரர். சிவனேஸ்வரன் நிஷாகரிக்கு!




பிறப்பு :
2004.09.02



இறப்பு :
2017.11.15



நண்பியே!
மூன்று வயதிலே நாம்
முன்பள்ளியில் உறவாடினோம்
ஆறாண்டு கல்வியினால் - வடஇந்து
கல்லூரியில் ஒன்றானோம்.....
எனதருகில் அமர்ந்திருப்பாய் - என்
நண்பி நீயென்பாய் - இன்று
உன் அருகில் நான் வரவோ
நீ எங்கு சென்று விட்டாய்.



வாயாடிப் பெண்ணாய்
வார்த்தைகள் பல சொல்லி - என்னை
மகிழ்வித்து சிரிக்க வைப்பாய்
இன்று உன் காலடியில் கதறுகின்றேன்
மீண்டும் ஒரு முறை எனைத் தேடி
வருவாயென்றால்
போராடி காலனவன் - உனை
வாதாடி வென்று விட்டானே
நண்பியே!
நீ என் மணம் வீசும்
மலர் அல்லவா
இதழ் உதிர்ந்து வீழ்ந்ததேன்
நீ என் ஒளி வீசும்
நிலவு அல்லவா
இருள் சூழ்ந்து மறைந்ததேன்



என் கானகத்துக் குயிலே - நிஷாகரியே
கவி நான் தேடுகின்
ஒரு முறை பாராயோ - எனைத்
தேடி வாராயோ......


உனைத் தேடும்
உயிர்த் தோழி
நாவலடி
ரகுனேஸ்வரன் கவிப்பிரியா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

தோற்றம்
02.09.2004



மறைவு
15.11.2017

இ. போ.சபை(வடக்கு)பிராந்திய தலைமைக் காரியாலயத்தில் உள்ளக கணக்காய்வாளராக கடமையாற்றும் திரு. மு.சிவனேஸ்வரன் அவர்களின் அன்பு மகள்

## அமரர் செல்வி சிவனேஸ்வரன் நீசாஹரி

அவர்கள்

அன்பின் திருவுருவாய் பாசத்தின் இருப்பிடமாய்
இன்முகம் காட்டி வாழ்ந்தாயே
நீ எம்மை விட்டு எங்கு சென்றாயோ?
உன் நினைவுகளுடன் கலங்குகின்றோம்
ஒருமுறை வந்தெம்மை பாராயோ!
உன் நினைவு எம்மை விட்டு நீங்காது.


அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கும், உற்றார், உறவினர்கள் அனைவருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

இ.போ.சபை(வட)
கோண்டாவில்.

பிரதான பிராந்திய முகாமையாளர்
பகுதித் தலைவர்கள்,உத்தியோகத்தர்கள்,
ஊழியர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நன்றி நவில்கின்றோம்

நினைவுகளை இதயத்தில் சுமந்தபடி எம்மையெல்லாம் ஆறாத்துயரில் ஆழ்த்திக் கர்த்தருக்குள் நித்திரை அடைந்த எமது செல்ல மகள் அமரர் சிவநேஸ்வரன் ரெபேக்கா அவர்கள் நோயுள்ள வேளை அவரை வைத்தியசாலைக்கு கொண்டு செல்வதற்கு உதவிபுரிந்த அயலவர்கள், உறவினர்கள் நண்பர்களுக்கும் எமது செல்வமகளின் மறைவுச் செய்தி கேட்டு எமது இல்லம் தேடி ஓடி வந்து ஆறுதல் தந்த அனைவருக்கும் நேரில பங்கு கொள்ளமுடியாத சூழ்நிலையில் வெளிநாடுகளிலும் தூரஇடங்களிலும் துயரத்தைச் சுமந்து தேடுகின்ற உறவுகளுக்கும் தொலைபேசி மூலம் ஆறுதல் அளித்தவர்களுக்கும் கண்ணீர் அஞ்சலிகளைப் பிரசுரித்த அன்பர்கள், நண்பர்கள் அயலவர்கள், மலர் வளையங்களால் அஞ்சலித்தோருக்கும், நல்லடக்க ஆராதனையை செவ்வையுற நடாத்திய எமது நாற்சதுர சுவிசேஷ சபையின் பாஸ்ரர் அருட்சகோதரி அவர்கட்கும் எமது மகளின் நல்லடக்க ஆராதனையில் கலந்து கொண்ட நல்லூர், நற்சதுரசுவிசேஷ சபைக்குடும்பத்தினருக்கும் உடன் இருந்து உதவிய இலங்கைப் போக்குவரத்துச் சபை உத்தியோகத்தர்கள், 31ம் நாள் நினைவு மலரில் ஆக்கங்கள் அளித்தவர்கட்கும் திறம்பட மலரை அச்சேற்றிய மருதம் பதிப்பகத்தாருக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

**இங்ஙனம்,**

**குடும்பத்தினர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலைப்பிரசங்கத்திலிருந்து

- ஆவியில் எளிமையுள்ளவர் பாக்கிய வான்கள். பரலோகராஜ்யம் அவர்களுடையது
- துயரப்படுபவர்கள் பாக்கியவான்கள் அவர்கள் ஆறுதலடைவார்கள்
- சாந்தகுணமுள்ளவர்கள் பாக்கியவான்கள் அவர்கள் பூமியைச் சுதந்தரித்துக் கொள்வார்கள்
- நீதியின் மேல் பசிதாகமுள்ளவர்கள் பாக்கியவான்கள் அவர்கள் திருப்தியடைவார்கள்
- நீதியின் நிமித்தம் துன்பப்படுகிறவர்கள் பாக்கியவான்கள் பரலோகராஜ்யம் அவர்களுடையது
- இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள் பாக்கியவான்கள் அவர்கள் தேவனைத் தரிசிப்பார்கள்
- சமாதானம் பண்ணுகிறவர்கள் பாக்கியவான் அவர்கள் தேவனுடைய புத்திரர் எனப்படுவர்.

மருதம் பதிப்பகம் – நெல்லியடி.
021 226 3210

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org